(2) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1975.)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப் படுத்துதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 30/1973) 9-வது பிரிவின் வரம்பு நிபந்தனையின்கீழ், இச் சட்டத்தின்கீழ் உரிமதாரருக்குக் கொடுக்கப்படக்கூடிய இழப்பு என அரசு கருதும் தொகையைக் கழித்துக்கொள்கிற தனது உத்தேசத்தை அறிவிக்கும் அறிவிப்பு ஒன்று அந்நிறுவன உடைமை அரசிடம் நிலை பெறும் நாளிலிருந்து ஓராண்டுக்குள் கொடுக்கப்பட வேண்டும். இருப்புப் பட்டியல்கள் அனுப்பப்பட்டு அவை முழுமையாகப் பரிசிலனை செய்யப்பட்ட பின்னரே, அரசுக்கு ஏற்பட்ட இழப்பு பற்றியும், அதற்குக் கழித்துக் கொள்ளப்பட வேண்டிய தொகைகள் பற்றியும் வரையறுக்கவியலும். முன்னுள் உரிமதாரர்களில் சிலர் தங்களின் இருப்புப் பட்டியல்களை இன்னும் பணிந்தனுப்பவில்லை. எனவே, தொகை கழித்துக்கொள்வதென்ற அரசின் உத்தேசத்தை அறிவிக்கும் அறிவிப்பு, அந்நிறுவனத்தின் உடைமை அரசிடம் நிலைபெற்ற நாளிலிருந்து ஓராண்டுக் கால அளவு அல்லது, அந்த நிறுவனத் திற்குச் சொந்தமான சொத்துக்கள் அனைத்தையும் அடக்கிய முழுமையான பட்டியலும், அதன் ஆவணங்கள் குறித்த பட்டியலும் அரசிடம் ஒப்படைக்கப் பெற்ற நாளிலிருந்து மூன்று திங்கள் கால அளவு இவற்றில் எது பிந்தியதோ அக்கால அளவிற்குள் அளிக்கப்பட வேண்டும் என்கிற வகையில் இச் சட்டத்தின் 2-வது பிரிவின் தற்போதைய வரம்பு நிபந்தனைக்கு விளக்கம் அளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்சொன்ன சட்டத்தின் 9-வது பிரிவைச் சேர்ந்த வரம்பு நிபந்தனைக்குத் தக்கவாறு விளக்கமளிப்பது அவசியமெனக் கருதப்பட்டுள்ளது. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன செயற்குறிப்பிற்குச் செயல் வடிவமளிக்கும் கருத்துடனியற்றப்பட்டதாகும். மேலவைத் துணைத் தலைவரவர்களே, இம் மாமன்றம் இத் தீர்மானத்தை ஏற்று நிறைவேற்றித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

@ 331 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

THIRU S. NARAYANASWAMY: Hon. Deputy Chairman, I take it that the amendment is intended to give time to Government to make deductions in the manner that they like. If it is so, I hope and trust this opportunity will not be availed of to go on making further deductions until we reach a very alarming point of negative compensation to the companies and the shareholders. This is a matter on which the undertakings and Government are still having discussions and it is not my intention to approach those points here. But what is important is that if it is merely intended to provide further time to make deductions, it seems to me an extremely disturbing amendment. That is all I want to say.

(பிற்பகல் 4.50).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, 'டிடக்ஷன் இன் மெரிட்டைப்' பொறுத்தவரையிலே சில கம்பெனிகள் பூரா கடன் கொடுக்கவில்லை என்று இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். அவர்கள் கணக்குக் கொடுத்து 3 மாதம் அல்லது ஒரு ஆண்டு இதில் எது பிந்தியதோ whichever is latter அதுதானே ஒழிய, இதனால் ஒன்றும் காம்பன்சேஷன் குறையும் என்று எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. விவரங்கள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் For the purpose of protecting the Government's interest என்ற அளவிலேதான் இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறோம்.

THIRU G. VASANTHA PAI: Sir, the hon. Member was referring to compensation. I was thinking that it was from compensation to confiscation.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1975) நிறைவேற்றப்பட வேண்டும்", என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்), திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1975) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் (சட்ட முன்வடிவு எண்

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 53/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என நான் முன்மொழிகிறேன்.

@ 331–333 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.